6. அரசினர் தீர்மானம்.

விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டப் பேரவையின் ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 31—3—1987 ஆம் தேதி அன்று தளர்த்தி அரசினர் அலுவல்கள் எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

5. வரவு-செலவுத் திட்டம், 1987-88, பொது விவாதம்—(தொடர்ச்சி)

திரு. ஆர். செங்காளியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய 1987-88 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய ராசியோ என்னவோ தெரியவில்லை, எப்போது பார்த்தாலும் சபாநாயகர் அவர்களும், துணை சபாநாயகர் அவர்களும் கடைசியில், நேரம் முடியும்போது பேச வாய்ப்புக் கொடுக்கிறார்கள். அன்றைக்கு அப்படித்தான் மூன்று நிமிடங்களுக்குள் முடித்துக் கொண்டேன். பேச அனுமதிப்பதாக இருந்தால் 10 நிமிடங்களாவது அனுமதித்தால்தான் பேசலாம். இல்லாவிட்டால் பேசாமல் உட்கார்ந்து விடுகிறேன். நான் சண்டை போடுபவன் அல்ல, வயதானவன். சண்டை போடுகிறவர்களுக்கு அதிகம் கொடுக்கிறார்கள். பல தடவை நேரிடையாகக் கேட்டாலும் டைம் கொடுப்பதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசுங்கள்.

திரு. ஆர். செங்காளியப்பன்: துணை சபாநாயகர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் உண்மையிலேயே பல ஏழையெளிய மக்களுக்கு பல நன்மைகளைச் சொல்லியிருந்தாலும் சில